பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 11 சனிக்கிழமை (24-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 147

# லலித் அத்துலத்முதலி சுட்டுக்கொலை



கொழும்பு, ஏப்ரல் 24

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான திரு. லலித் அத்துலத்முதலி நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொழும்பு கிருலப்பனையில் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் வைத்து அவர் சுடப்பட்டார் என்றும் –

நெஞ்சில் காயமடைந்த அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற சமயம் அங்கு மரணமானார் என்றும்—நேற்று நள்ளிரவு பி. பி. ஸி. தெரிவித்தது.

நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் திரு. லலித் அத்துலத் முதலி கொழும்பு மாவட்டம் மேல் மாகாண சபைக்கு போட்டியிட இருந்தார் என்பதும்—

ஆளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கடும் போட்டியாக—சவாலாக அவர் இருந்தார் என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியில் புலிகள் மீண்டும் அதிரடித் தாக்கு!

## மாந்தையில் இரு படையினர் பலி; இருவர் காயம்; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் உட்புகுந்து மீண்டும் ஒரு வெற்றிகரமான தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7 05 மணிக்கு விடுதலைப் புலிகள் மாந்தையில் மின்னல் வேக அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

அந்தத் தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் இருவர் காயமுற்றனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

தள்ளாடி முகாமுக்கும் மாந்தை முகாமுக்கும் இடையே — மாந்தையில் இருந்து தள்ளாடி நோக்கி டிராக்டர் ஒன்றில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தினர்.

சுமார் இரண்டு நிமிடங்களில் — மின்னல் வேகத்தில் — தாக்குதல் நடத்திய புலி வீரர்கள் படையினரின் ஆயுதங்களையும் கைப்பற்றி எடுத்துச் சென்றனர்.

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுல் உள்ள பகுதியில் இவ்வாண்டில் விடுதலைப் புலிகள் நடத்திய ஐந்தாவது வெற்றிகரத் தாக்குதல் இதுவாகும்.

மன்னார்தீவில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டை விடுதலைப் புலிகள் உடைத்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

மன்னார் மாந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் மற்றும் ஆயுத தளபாடங்கள் வருமாறு:-

- ★ ரி 56 துப்பாக்கி — 03
- ★ ஏ.கே ஹோல்ஸர் — 04
- ★ மகஸின்கள் — 09
- ★ நடுத்தர ரவைகள் — 366
- ★ இராணுவத் தொப்பி — 01

[ஓ-5]

## கொழும்புக் கல்விமான்கள் யாழ்ப்பாணம் வர முயற்சி

### மக்கள் கருத்தை அறிய விருப்பம்

கொழும்பு, ஏப். 24

கொழும்பைச் சேர்ந்த சிங்களக் கல்விமான்கள் சிலர் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைமையைக் கண்டறியவும், மக்கள் கருத்தை அறியவும் உத்தேசித்துள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்குரிய ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணம் செல்லும் கல்விமான்கள் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தவும் அக்கறையாக இருக்கின்றனர்.

தெரிவுக் குழுவுக்கு அப்பால் சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கல்விமான்கள்குழு ஒன்று ஆர்வம் காட்டி வருவது தெரிந்ததே. இந்தக் குழுவில் கொழும்புப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் ரி. எல். பீரிஸ், அரசகருமமொழிகள் ஆணைக் குழுத் தலைவர் திரு டெஸ்மண்ட் பெர்னாண்டோ, 'மார்க்கா' நிறுவனத்தின் தலைவர் திரு. கொட்பெரி

( 6ஆம் பக்கம் பார்க்க)

## இளாலிகரையோரப்பகுதியில் பொம்மர் அச்சுறுத்தல்

### படகு போக்குவரத்து நடந்தது

தென்மராட்சி, ஏப். 24

நேற்று முன்தினம் வியாழன் மாலை 6 45 மணியளவில் அல்லிப்பளை — இளாலிக் கடற்கரையோரப் பகுதிகளுக்கு மேலாக பொம்மர் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டு பயணிகளை அச்சுறுத்தியது:

அங்கு கூடியிருந்த பெரும் எண்ணிக்கையான பயணிகள் பதறியடித்து நாலா பக்கமும் சிதறி ஓடினர். எனினும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. சந்தனமடு பகுதியில் மக்கள் நடமாடத் தடை!

மட்டக்களப்பு, ஏப். 24

மட்டக்களப்பின் மேற்குப் பகுதி — படுவான்கரையில் உள்ள சந்தனமடு பிரதேசத்தில் பொதுமக்கள் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது

இந்தப் பகுதியை ஸ்ரீலங்கா விமானப் படையினர் ஹெலிகளில் பறந்து அடிக்கடி நோட்டமிட்டு வருகின்றனர்.

வயல் பரப்புகள் அடங்கிய காட்டுப் பிரதேசமான சந்தனமடுப் பகுதியில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முன்னேற்பாடாகவே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

[ஓ-3]

## செஞ்சிலுவைப் பிரதிநிதி இன்று யாழ். வருகிறார்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி டொமினிக் டுபோர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

நேற்று பலாலி வந்துசேர்ந்த டுபோர் காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'வாதுவ' கப்பல் மூலம் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேர்வார்.

அவர் இங்கு யாழ். அலுவலக அதிகாரிகளுடன் கலந்து பேசி இங்குள்ள நிலைமையை அறிவார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளையும் அவர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திங்கள் அவர் கொழும்பு திரும்புவார். (இ-3)

## அழிஞ்சிப்பொத்தானை காவலரண் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 24

மட்டக்களப்பு — பொலன்னறுவ எல்லைப்பகுதியிலுள்ள அழிஞ்சிப்பொத்தானையில் அமைக்கப்பட்டிருந்த பொலீஸ் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த புதன் இரவு இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகவும்—

பொலிஸார் ஒருவர் அந்த சம்பவத்தில் படுகாயமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## பல்கலைக்கழக மாணவர் மீது பொலீஸார் நேற்று தாக்குதல்

### கோட்டை ரயில் நிலையம் முன் சம்பவம்

கொழும்பு, ஏப் 24

கொழும்பு கோட்டை ரயில் நிலையப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்திய அனைத்துப் பல்கலைக் கழக ஒன்றிய மாணவர்களைக் கலைப்பதற்கு பொலீஸார் குண்டாந்தடிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் மேற்கொண்டனர். இதில் பல மாணவர்கள் காயம் அடைந்தனர். காயமடைந்த [illegible] இக்கு உள்ளான ஏழு மாணவர்கள் பின்னர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் இச் சம்பவம் இடம்பெற்றது.

சுதேச மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இப் போராட்டத்தை நடத்தி வருவது தெரிந்ததே.

கோட்டை ரயில் நிலையப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் கட்டடத்தைச் சுற்றிவளைத்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது

இதற்கிடையில் சுதேச

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை

## இளங்கலைஞர் மன்றம் மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில்)

இடம்: மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்: 25 - 04 - 1993 ஞாயிறு மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

மாலை 5 - 00 — 5 - 45 வீணை இசை

செல்வி ஜனனி சொக்கலிங்கம் — வீணை
செல்வன் கே. கண்ணதாசன் — மிருதங்கம்
செல்வன் பி. ரதிரூபன் — கடம்

5 - 45 — 6 - 45 இசைக்கச்சேரி

திருமதி சக்திதேவி சிவகுமாரன் — பாட்டு
செல்வன் எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் — கடம்

6 - 45 — 7 - 15 மங்கள விளக்கேற்றல்

திரு. எஸ். உதயகுமார்
(உரிமையாளர், கலைமகள் வர்த்தகநிலையம்)
மு. சிவப்பிரகாசம் அவர்கள்
(பொது முகாமையாளர் யாழ்.ப. நோ. கூ. சங்கம்)

தலைமையுரை

ஜூசைப்பிள்ளை சிறில் அவர்கள்
(தலைவர், யாழ். ப. நோ. கூ.சங்கம்)

பிரதம விருந்தினர்கள் உரை:

திரு. பொ. பாலசிங்கம்
(ஆணையாளர், யாழ். மாநகரசபை)
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்
(தலைவர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

7 - 15 — 8 - 45 சிறப்புக் கச்சேரி

நாதஸ்வரம்:
திரு. என். கே. பத்மநாதன்
திரு. வி. கே. பஞ்சமூர்த்தி
எரு. ஆர். கேதீஸ்வரன்

தவில்:
திரு. கே. ஆர் புண்ணியமூர்த்தி,
திரு. பி, முருகதாஸ், திரு. ரி. உதயசங்கர்,
திரு. ஆர். எஸ். ரவீந்திரன்.

இசை ஆர்வலர்கள் அபிமானிகள் அனைவரையும்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

★ ஒலியமைப்பு: "சிங்கிளயர்"
நித்தியானந்தன், யாழ்ப்பாணம்.
★ ஒளியமைப்பு: "மனோ லைட்"
மனோகரன், கோப்பாய்.

மு. இராமலிங்கம் — செயலாளர்
பொன் சுந்தரலிங்கம் — தலைவர்

(25365)



## பிற்போடப்பட்டுள்ளது

சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் 23 - 04 - 93 நடைபெற இருந்த அரிச்சந்திரா மயானகாண்டம் நாடகம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது: நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரும் 24 - 04 - 93 பிற்பகல் 2-30 மணிக்கு சித்த மருத்துவ பீடத்திற்கு சமுகம் தரவும்.

சோ. சபாநாதன், தலைவர்.
ஐ ஜெபநாமகணேசன், செயலர்;

(25367)



## புதுக் கடை திறப்பு விழா

நிகழும் ஸ்ரீமுக வருஷம் இன்று (24 - 04 - 1993) சனிக்கிழமை காலை மணி 9 — 9 30க்கு இடையில் வரும் சுப வேளையில்,

## ஹாசன்ஸ் வோர்ச் வேக்ஸ்


இல. 55. கஸ்தூரியார் வீதியில்,

திறந்து வைக்கப்படும். இவ் வைபவத்திற்கு அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. கமலஹாசன் (உரிமையாளர்).

மணிக்கூடு திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்

புதிய மணிக்கூடுகள் விற்பனையும் மற்றும்
★ மணிக்கூட்டு பற்றறி பொருத்துதல்
★ மணிக்கூடுபொலிஷிங்
★ மணிக்கூட்டு- கண்ணாடி - பொருத்துதல்
ஆகியவை செய்து கொடுக்கப்படும்.




(25368)


## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சதுர்த்தித் திருவிழா நாளை மாலை நடைபெறும். விஷேட அபிஷேகம் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார்.

o o o

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (இ)

o o o

மீசாலை பன்றிக்கேணி கந்தசாமி கோவிலில் கந்த புராண கலாச்சார விழாவும், புராணிகர்கள் கௌரவிப்பு நிகழ்ச்சியும் இன்று சனிக்கிழமை நடைபெறும். (க-117)

o o o

ஏழாலை மேற்கு கருணாகரப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு சதுர்த்தி அபிஷேகம் நடைபெறும். (க-45)

o o o

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் ஆலய வருடாந்தப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

மே மாதம் 4ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-15)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப். 24

காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுவோரது ஏப்ரல் மாதக் கொடுப்பனவு இன்று காலை 9 மணி முதல் வழக்கம்பரை தற்காலிக கிராமிய வங்கி அலுவலகத்தில் வழங்கப்படும். (அ)

## மேதின கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 24

மேதினத்தை சிறப்பாக நடத்துவதற்கு முன்னேற்பாடாக பல்வேறு அமைப்புகளும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றன.

அந்த வரிசையில் — சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் தனது கிளைக்குழுத் தலைவர்களையும், செயலாளர்களையும் நாளை ஞாயிறு காலை 9. 00 மணிக்கு, தலைமைச் செயலகத்தில் சந்திக்க ஏற்பாடாகி உள்ளது.

★ வலிகாமம் தெற்கு பிரதேச சபை ஊழியர்களும், பிரதேசசபையின் கீழ் வரும் சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்களும் பங்கு பற்றும் கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை. 10.00 மணிக்கு, உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

★ சாவகச்சேரிப் பகுதியில் உள்ள அரசாங்க, உள்ளூராட்சி, வங்கி ஊழியர்கள் மற்றும்சனசமூக நிலைய பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கள் பிற்பகல் 2. 30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறும்.

(ஒ-117 89)


முதலாம் அரையாண்டு
விஞ்ஞான பீடப்

## பரீட்சைகள் 1992

மேற்படி முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளுக்குரிய பரீட்சைகள், கீழ்த் தரப்பட்டுள்ள திகதிகளில் ஆரம்பமாகின்றன.

முதலாம் ஆண்டு பரீட்சை- 13-05 1993
இரண்டாம் ஆண்டு பரீட்சை- 30 04 1993
மூன்றாம் ஆண்டு பரீட்சை- 07 05 1993

பதிவாளர்.

(சி-5042)



## அழைப்பு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவரான

### அமரர் இளையதம்பி சபாலிங்கம்

(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அவர்களை நினைவு கூருமுகமாக

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும்

### நினைவுப் பேருரை

"யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம்"

நிகழ்த்துபவர் பேராசிரியர் வ. ஆறுமுகம்
(பேராசிரியர், கல்வியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்)

காலம்: 25 - 04 - 93 (ஞாயிறு)
நேரம்: பிற்பகல் 3 - 30 மணி
இடம்: குமாரசாமி மண்டபம்

அமரரின் உறவினர்கள், ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

[சி-5043]



## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## ஆண்டு 7 அனுமதி - 1993

(1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற 1991 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இவ்வருடம் ஆண்டு 7 இல் அனுமதி வழங்கப்படவுள்ளது.

இவ்வனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தைக் கல்லூரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 29-04-1993.

யாழ்ப்பாணம்
1993-04-23

அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

(சி/5045)



1995 க. பொ. த.
உயர்தர வகுப்புகளுக்கான

## புதிய அனுமதி

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்)

விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 28 - 04 - 1993 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பவும்;

அதிபர்,
யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்.

(சி-5040)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 15 — 05 — 1922
உதிர்வு: 05 — 05 — 1992

திருமதி
### சோதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி

திதி: 24-04-1993

தந்தையாய் தாயாய் தனிப்பெரும்
சொத்துமாய் இருந்த தங்களுக்கு
கண்ணீரஞ்சலிகள்.
வந்தனைகள் செய்தே வாழ்த்துகிறோம்
சாந்திபெற.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

(25376)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த சகல ஊழியர்களும் எதிர்வரும் திங்கட்கிழமை 1993 - 04 - 26 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற விருக்கும் கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

நிர்வாக முகாமையாளர்,
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை.

158/3, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (25362)


# யாழ். குடாநாட்டு கடலில் பெற்றோலியம் உண்டு

## விஞ்ஞான மாநாட்டில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 24

''யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தீவுகளுக்கு அருகிலுள்ள கடலில் பெற்றோலிய எரிபொருள்கள் கிடைக்கும் சாத்தியம் உள்ளது.''

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மாநாட்டின் முதல் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகளில், ''யாழ்ப்பாணக் குடா நாட்டினதும் சிறிலங்காவினதும் புவி அமைப்பியல்'' என்ற தலைப்பில் உரையாற்றிய நீர்ப்பாசன திணைக்களத்தைச் சேர்ந்த திரு. கே. யோகராசா இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

திரு. யோகராசா மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:-

"இந்தியாவிலுள்ள காவேரி ஆற்றின் படுகையில் எரிபொருள், எண்ணெய் வளம் உண்டு. இதுபல காலங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. யாழ். குடா நாட்டிலுள்ள வடமராட்சிக் கடலேரியினூடாக காவேரி நதி முற்காலத்தில் ஓடிக் கிழக்கரையை அடைந்தது. யாழ். குடாவில் உள்ள தீவுகளும் சுற்றியுள்ள கடலும் காவேரி ஆறு கலக்கும் இடமாக இருந்தது.

பின்பு இந்தியாவுக்குத் தெற்கேயிருந்த பகுதி பல காரணிகளால் பிரிந்து தெற்கே தள்ளப்பட்டு இலங்கையாகவும், மாலைதீவாகவும் உருவமெடுத்தன.

யாழ்ப்பாணக் குடாநாடும், தீவுகளும், மன்னாரும் காவேரிப் படுகையிலிருந்து பிரிந்து வந்தவையே. எனவே இங்கு எரிபொருள் வளம் காணப்படும் சாத்தியம் உள்ளது. ஏற்கனவே பேசாலையில் எரிபொருள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு அகழ்வு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன— என்றார்.

முதல் நாள் பிற்பகல் நிகழ்ச்சிகளில் பேராசிரியர் ஆர் குமாரவடிவேல், பேராசிரியர் வீ. நவரத்னராசா, கலாநிதி கே. சித்திரவடிவேலு ஆகியோரின் சிறப்புரைகளும் இடம்பெற்றன. (க)


உடுவில் மகளிர் கல்லூரி
(தொடர்கல்வி நிறுவனம்)
பட்டப்படிப்புகள் பிரிவு

G.A.Q - 94
யாழ். பல்கலைக்கழகம்

ஆரம்பம்: 24 - 04 - 1993
பிற்பகல் 3 மணி

நேர சூசி

| | |
|---|---|
| பொருளியல் | புதன், வெள்ளி 4p.m. |
| தமிழ் | திங்கள்-3p.m., வெள்.-5p.m. |
| இந்துநாகரிகம் | திங்கள், புதன் 5p.m. |
| அரசியல் | செவ்., வியாழன் 3p.m. |
| மெய்யியல் | திங்கள்-4p.m., புதன் 3p.m. |
| ஆங்கிலம் | செவ்.- 5p.m., வெள்.-3p.m. |
| கிறிஸ்தவநாகரிகம் | திங்கள், புதன் 5p.m. |

— நிர்வாகி.

(சி-5021)


## கிருமிநாசனி விநியோகம்

தென்மராட்சி, ஏப். 24

விவசாயிகளுக்குத் தேவையான கிருமிநாசனி மற்றும் மருந்து வகைகள் பளையில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக விவசாயப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு இருபது லீற்றர் மண்ணெண்ணெய் 10ரூபா 57 சதவீதம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-117)

## விநியோகம்

வடமராட்சிக் கிழக்கில் பயறு, கௌபி ஆகிய சிறுதானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது. (த-144)

## விபத்தில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 24

நாவற்குழியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி – சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணமானார்.

நுணாவிலைச் சேர்ந்த விறகு வியாபாரியான அப்புலிங்கம் தேவராசா (வயது 24) என்பவரே மரணமானவர் ஆவார். (இ-15)

## தந்தை செல்வா நினைவு ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப். 24

அமரர் தந்தை செல்வாவின் 16ஆவது ஆண்டு நினைவஞ்சலி ஆராதனை சுன்னாகம் ஐயனார் கோவில் ஒழுங்கையில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபையின் தெல்லிப்பழைப் பகுதி வழிபாட்டு இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு அருட்திரு ராஜ்குமார் அடிகளார் தலைமையில் நடைபெறும். (க)

## திருத்த வேலைகள் நடைபெறுகின்றன

விமானத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலையின் டாக்டர்கள் தங்கும் விடுதிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

திருத்தும் பணிகள் முடிவடைந்ததும் டாக்டர்கள் மீண்டும் இங்கு தங்க வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (த-17)


## மகாபொல புகைப்படங்கள்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இடம்பெற்ற மகாபொல சான்றிதழ் வழங்கல் வைபவத்தில் பங்கு கொண்ட பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் தங்கள் புகைப்படத்தினை சித்ராலயா ஸ்ரூடியோவில் வந்து பெற்றுச் செல்லவும்.

சித்ராலயா,
172 (18), ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம்.

(6132)

## பிற்போடப்பட்டுள்ளது

மானிப்பாய் வடக்கு வளர்மதி சனசமூக நிலையத்தால் இன்று (24 - 04 - 1993) மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடத்த இருந்த கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் 22 - 05 - 1993 அன்று நடைபெறும் என அறியத்தருகின்றேன்.

நன்றி!

- செயலாளர்.

(6130)

## பெயர் மாற்றம்

கிராம்புவில் சாவகச்சேரியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் ஆகிய நான் எனது பராயமடையாத மகன் சிவசுப்பிரமணியம் உருத்திரனின் பெயரை
24 - 04 - 1993 முதல்

சிவசுப்பிரமணியம் பகீரதன்

என மாற்றியுள்ளேன் என அறியத்தருகிறேன்.

இங்ஙனம்:
சி. சிவசுப்பிரமணியம்

(6126)

O/L பகல் முழு நேர வகுப்புகள்

ஆரம்பம்: 24 04 - 1993

தரமான ஆசிரியர்களின்
உயர்வான சேவையில் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

செலின் கல்வி நிறுவனம்

இருபாலை, கோப்பாய்.

(25364)

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 95 புதிய பிரிவு

தூய கணிதம்
பிரயோக கணிதம் } திரு. கமலசிங்கம்

ஆரம்பம்: 27 - 04 - 1993
செவ்வாய் 5.00 மணி

(இ-5025)

## ஈழத்து நூல், சஞ்சிகை, சிற்பம், ஓவியம், புகைப்படம், சித்த வைத்திய கண்காட்சி-1993

அன்பர்கள், அபிமானிகள் நிறுவனங்களிடமிருந்து இக்கண்காட்சியில் வைப்பதற்கு நூல்கள், சஞ்சிகைகள், ஏட்டுச் சுவடிகள் ஆகியவற்றை எதிர்பார்க்கின்றோம். விரும்புவோர் 1993 - 04 - 27 ஆம் திகதியிலிருந்து 1993 - 05 - 05 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை, (திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்) காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை யாழ். மாநகர சபைப் பிரதம நூலகரிடம், நல்லூர்க் கிளை நூலகத்தில் கையளிக்கலாம்.

சிற்பங்கள், ஓவியங்களைக் கையளிக்க விரும்புவோர் 1993 - 04 - 27 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து 1993 - 05 - 15 ஆம்திகதி மாலை 4 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் சித்திர ஆசிரியர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களிடம், சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் கையளிக்கலாம்.

புகைப்படங்களைக் கையளிக்க விரும்புவோர் 1993 - 04 - 27 ஆம் திகதி காலை 9 மணி முதல் 1993 - 05 - 20 ஆம் திகதி பிற்பகல் 4 மணி வரை, சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில், யாழ். பனை அபிவிருத்திச் சபையின் தலைமைச் செயலகத்தில் திரு. சசி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் கையளிக்கலாம்.

சித்த மருத்துவர்கள் தம்மிடமுள்ள வைத்திய நூல்கள், சஞ்சிகைகள், மருத்துவ ஏடுகள், மருந்துகள், மூலிகைகள் ஆகியவற்றைக் கையளிக்க விரும்புவோர், யாழ் பழைய மின்சார நிலையத்தில் உள்ள சித்த வைத்தியசாலையில், யாழ். மாநகர சித்த மருத்துவத் தலைவர் வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

எம்மினத்தின் வரலாற்றினையும் கலை, கலாசார மேம்பாட்டினையும் எடுத்துக் காட்டும் பழைய சாதனங்களை வைத்திருப்போர் அவற்றினைக் கண்காட்சியில் வைப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இக்கண்காட்சியில் காட்சிப் பொருள்களை நேரடியாக வைத்திட விரும்புவோர் யாழ்ப்பாணம் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களோடு எழுத்து மூலம் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்/இணைப்பாளர்,
கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1993-04-19 (சி-5038)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அடை வைப்பதற்குரிய ஊர் முட்டை, பன்டம் முட்டை, தாரா முட்டை எந்த நேரமும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, நல்லூர். (25331)

சுகாதார முறைப்படி வறுத்துத் திரித்த தரமான சன் பிறாண்ட் மிளகாய்த் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். தயாரிப்பாளர்கள்: கந்தசாமி அன் சன்ஸ், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. (25332)

யமுனாபாறி கடா பட்டிப் பயன்பாட்டிற்குரிய நிலையில் விற்பனைக்குண்டு. மாலை 3 மணிக்குமேல் பார்வையிடலாம் 6/2, சந்தான கோவில் வீதி, பாண்டியன் தாழ்வு, கண்டிக்குளி. (25353)

## விற்பனையாகின்றது

லீலா சித்திரக்கலண்டர் புதிய லிதோ படங்களுடன் விற்பனையாகின்றது. மதிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-4940)

## வெளிவந்துவிட்டது

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு. மேலும் விவரங்களுக்கு: 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-4720)

## இலவச திருமண சேவை

24 வயது, அனுசம், செவ்வாய் 1, கவினில் உள்ள மணப்பெண்ணுக்கு சுவிஸில், டென்மார்க்கில் மணமகன் தேவை. உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி, (25307)

## தேவை

வெற்று ஜாம் போத்தல்கள் நியாயமான விலைக்கு கொள்வனவுசெய்யப்படும். வேலவன் ஸ்ரோர்ஸ், (நல்லூர் கோவில் முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லூர். (25337)

நல்ல நிலையில் உள்ள ஹை ஏ. எஸ். வான் (டீசல்) அல்லது E L F. ட்றக், டீசல் கார் உடன் தேவை. தொடர்பு: சனி, ஞாயிறு காலை 9—12, மாலை 3—6 வரை, Sritharan, Becon கல்வி நிலையம், யாழ்ப்பாணம். (6131)

## வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: நடனமுருகன் வைத்திய நிலையம், சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம். (6127)

## ஆசிரியர் தேவை

G.C.E. O/L படிக்கும் மாணவனுக்கு வீட்டில் கற்பிக்கத் தகுதியுள்ள ஆசிரியர் தேவை. தொடர்பு: வே. நடராஜா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (6125)

## சுகவாழ்வுக்குத் தூபம்

நித்திய சுக வாழ்விற்குத் தினமும் காலை, மாலை வீட்டில் நீம் தூபம் புகையுங்கள். அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது. மில்க்வைற். (சி-50ı9)

## தாதிகள் தேவை

வைத்தியசாலைக்கு பெண் தாதிகள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் சான்றிதழ்களுடன் காலையில் சமுகமளிக்கவும். மெடிக்கல் சென்ரர், நவாலி தெற்கு, மானிப்பாய் (6129)

## தியான நூல்

செபமாலைத் தியானம் குடும்பத் தியான வாழ்வுக்கும், தேவதாயாரின் அன்பு நிறைவுக்கும் வழிகாட்டும் வைகாசி மாத ஒளி விளக்கு நூல். விற்பனை நிலையம்: ''ஆவே மரியா'', புனித சிந்தாத்திரை மாதா இல்லம், இல. 92, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (25361)

## புலமைப் பரிசில் பரீட்சை

1992ஆம் ஆண்டு உட்பட 7 வருட வினா-விடை விற்பனையாகிறது. க. பொ. த. சாதாரண வினா விடையும், 1992 உட்பட சகல பாடங்களுக்கும் விற்பனையாகின்றது. அப்பியாசக்கொப்பிகள் மலிவாக விற்பனை செய்யப்படுகின்றது அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி-4946)

## தவறிவிட்டது

361080190V இலக்க அடையாள அட்டை யாழ்ப்பாணம் ஸ்ரேசன் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க. கனகன், மணியரசன் வீடமைப்புத் திட்டம், அரியாலை என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். (25363)

---

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
பரியோவான் கல்லூரி

2ஆம் தவணை ஆரம்பம் 28-04-1993 புதன் கிழமை ஆகும்.

— அதிபர்கள்.

(சி-5034)

---

# புதிய பிரிவு A/L 95

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C.C.A.

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | — | உதயன் | 10 — 11 |
| கணக்கியல் | — | ஸ்ரீ | 9 — 10 |
| வர்த்தகம் | — | இரட்ணம் | 11 — 12 |
| அளவையியல் | — | சயந்தன் | 8 — 9 |
| இந்து நாகரிகம் | — | ஜோதீஸ்வரன் | 1 — 2 |
| தமிழ் | — | தங்கராசா | 9 — 10 |
| புவியியல் | — | வேலாயுதபிள்ளை | 12 — 1 |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் | 7 — 8 |
| கிறிஸ்தவ நாகரிகம் | — | நிமலதாஸ் | 1 — 2 |

**ஆரம்பம்: 25 - 04 - 1993**

ஞாயிறு காலை 8 00 மணி

குறிப்பு: பிரிவு I ,II அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

(சி-4945)

---

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

பிரிவு - I

## O/L DAY CLASS
## 1993 ஆரம்பம்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | மகேந்திரன் |
| தமிழ் / சமயம் | — | பண்டிதர் |
| சமூகக்கல்வி | — | வேலா |
| வர்த்தகம் | — | நவம் |
| ஆங்கிலம் | — | தர்மலிங்கம் |

வாரத்தில் 4 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்

(சி-4931)

---

# நினைவஞ்சலி

ஓராண்டு ஈராண்டு





அமரர்
## விசுவநாதி கதிரவேலு

தாய் மடியில்: 23 — 03 — 1910
இறையடியில்: 05 — 05 — 1992

அமரர்
## கதிரவேலு முத்தாச்சி

தாய் மடியில்: 07 — 03 — 1918
இறையடியில்: 21 — 12 — 1990

திதி: 24 — 04 — 1993

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாச விளக்காய், பலரும் மதிக்க வாழ்ந்திட்ட எங்கள் அன்புத் தெய்வங்களே! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு எங்குதான் சென்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம். (25360)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் கந்தசாமி பாரத்

மடியில்: 07—04—1972
மண்ணில்: 24—04—1989

நீ ஓய்ந்து போய்
நாலாண்டுகள் நினைவில்
நிறைந்ததுவோ நீண்ட
நாதங்கள்
போரோய்ந்து போனாலும்
போய் ஓடி மறையுமோ
உன் நினைவுகள்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;
அப்பா, அம்மா, சகோதரிகள்,
சகோதரர்கள், மாமா, அத்தை,
மைத்துனர்கள், அண்ணிமார்,
மக்கள்.

''இரத்தினவனம்'',
வதிரி,
அல்வாய். (25342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இவரால் எப்படி தடுக்க முடியும்?

வடக்கு - கிழக்கில் நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை போசன் விழாவை நினைவு கூரும் விதத்தில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கு மக்கள் உறுதி பூண வேண்டும். அதற்கான முயற்சிகளுக்கு அவர்கள் ஆதரவளிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசா, வியாழக்கிழமையன்று நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மக்கள் ஆதரவைக் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் நாடாளுமன்ற உரை முழுக்க முழுக்க மாகாணசபைத் தேர்தலுக்கு ஆதரவு தேடும் பேச்சாகவே அமைந்தது. தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுவது போல, அரசாங்கம் செய்த நன்மைகளை மக்களுக்கு ஞாபகப்படுத்தி, அவற்றையும் மேலும் புதிய திட்டங்களையும் அமுல் செய்வதற்கு ஆளும் கட்சியையே வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று சிங்கள மக்களுக்குப் புத்திகூறும் வகையில் ஜனாதிபதி உரையாற்றினார்.

நாட்டின் மிக முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து அவர் பெரிதாகப் புதிதாக ஒன்றும் கூறவில்லை. பொதுக்கூட்டங்களில் பேசி வந்தவற்றையே மீண்டும் சொல்லியிருக்கிறார்.

தெரிவுக் குழுவின் சிபார்சுக்கு அரசு காத்திருக்கிறது. அது கிடைத்ததும் அரசாங்கம் அந்தச் சிபார்சின் அடிப்படையில் உறுதியான முடிவை எடுத்து அதனை அமுல் செய்யும் — என்று அரைத்த மாவையே மீண்டும் அரைத்திருக்கிறார்!

எதிர்வரும் ஜூன் மாதம் வரும் போசனோடு ஆயுத மோதலை முடிவுக்குக் கொண்டுவர அரசு முயற்சிக்கும் என்ற ஒரு புதிய கால இடைவெளியைத் தொட்டுக் காட்டியிருப்பதும் —

இனப்பிரச்சினைக்கு அரசு வகுக்கும் தீர்வை நடைமுறைப் படுத்தச் சிங்கள மக்கள் ஆதரவு தர வேண்டும் என்ற கோரிக்கையுமே — அவரது பேச்சின் மேலதிக அம்சங்கள்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அவகாசங்களைக் கூறிக் காலத்தை வாங்குவது அவரது வழமையான நடைமுறை உத்தி. மே மாதம் பதினேழாம் திகதி மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னர் வரும் பண்டிகை போசன். எனவே பிரச்சினைக்குத் தீர்வு விரைவில் வந்து விடும் என்று கூறி மாகாணசபைத் தேர்தலில் ஆளுங்கட்சிக்கு வாக்கு வாங்குவதற்கு ஓதப்பட்ட வசிய மந்திரமே போசன் அவகாசம்!

சிங்கள மக்களுக்குச் சாதகமான, சார்பான ஒரு யோசனையை — சிபார்சையே — தெரிவுக்குழு வகுத்திருக்கிறது. அதுவே அதனது இறுதிச் சிபார்சாகவும் இருக்கும் என்பதனைத் தலைவர் மங்கள முனசிங்கா பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் உறுதிப்படுத்தி இருக்கிறார். அப்படி இருக்க, அரசு தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் தன்னாட்சித் தனியாட்சிக்கு வகை செய்யும் ஒரு திட்டத்தை வகுக்கும் என்று கனவும் காண முடியாது. அத்தகைய ஒரு தீர்வுக்கு சிங்களவர்களின் ஆதரவைக் கேட்பது ஏன்? அவர்கள் தமக்குச் சாதகமான தீர்வுக்கு எதிராக இருப்பார்களா? அவ்வாறாயின்......

அரசு வகுக்கும் தீர்வுக்குச் சிங்கள மக்களின் ஆதரவு உண்டு. அதற்கு மேல் ஒரு சென்றி மீற்றர் தானும் அசைய முடியாது என்று கூறுவதற்காக இந்த ஆதரவு தேடும் உச்சாடனம்!

மொத்தத்தில் ஜனாதிபதி தமது கொள்கைத் திட்ட உரையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசின் கொள்கை என்ன, திட்டம் ஏது என்பதைத் தெளிவுற, உறுதிபடக் கூறாமல் வழமைபோலவே வழுவி நழுவிக் கொண்டார்!

நாடு பிரிக்கப்படுவதைத் தடுப்பது தான் இன்றைய அவசர தேவை என்று கூறுகிறார். இவரால் எப்படி அதனைத் தடுக்க முடியும்?

---

யாழ். மாவட்ட

# ப. நோ. கூ. சங்கங்களின் 5 அம்சக் கோரிக்கைகள்

## அரச அதிபரிடம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 24

தமது பிரச்சினைகள் தொடர்பான ஐந்து அம்சக் கோரிக்கைகள் கொண்ட மகஜர் ஒன்றை யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் யாழ். அரச அதிபருக்கு கையளிக்கத் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் அந்தக் கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படாத விடத்து சங்கங்கள் தமது கிளைகளை மூடிப் போராட்டம் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை பணிமனையில் கூடி மேற்படி தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

சங்கங்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகள் வருமாறு:-

★ கப்பல் மூலம் எடுத்து வரப்படுகின்ற உணவுப் பொருள்களை வர்த்தகத் திணைக்களத்துக்கும், சங்கங்களுக்கும் இடையே சரியான முறையில் பங்கீடு செய்தல்.

★ இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்துள்ள சங்கங்களுக்கு அவைகள் இழந்த சொத்துக்களுக்கு நிவாரணம் வழங்கல்.

★ மக்களுக்கு விநியோகிப்பதற்காக சங்கங்களுக்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் பரல்களில் மண்ணெண்ணெய் அளவு குறைந்திருப்பதால் சங்கங்களுக்கு ஏற்படும் நட்டங்களுக்கு உரிய தீர்வு காணல்.

★ உணவுப் பொருள்களை ஏற்றி இறக்கும் சங்கங்களின் வாகனங்களுக்கான கூலி தொடர்பான பிரச்சினை 1991 முதல் தீர்க்கப்படாமல் இருப்பதால் அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல்

★ கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட சில உணவுப் பொருள்களின் விலைகளை செயலகம் அண்மையில் குறைத்ததால் சங்கங்களின் இருப்பில் இருந்த பொருள்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு நிவாரணம். (த-5)

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 24

கோண்டாவில் ஞானவீர சங்க சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு விழாவை ஒட்டிய விளையாட்டுப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

மாணவர் மறுமலர்ச்சிக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகள் நாளை நடைபெறும். [இ-5]

## நாளை

யாழ். கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேதினம் உட்பட பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. (த-5)

o o o

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் நினைவுப் பேருரைகளில் யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் இளையதம்பி சபாலிங்கம் நினைவுரை நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 - 30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைப் பேராசிரியர் வ. ஆறுமுகம் யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம் என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். (க)

o o o

சமூக அபிவிருத்தியில் சமயத்தின் பங்கு என்பது பற்றிய கருத்தரங்கு நாளை மாலை 3 - 00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

பலாலி ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் திரு. சிவ மகாலிங்கம் கருத்துரை வழங்குவார். (க-118)

o o o

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகில் நடைபெறும். (க-154)

o o o

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரால் மாதாந்தம் நடத்தப்படும் யோகாசன கருத்தரங்குத் தொடரில் நாளை பிற்பகல் 3-30 மணிக்கு "நோய் தீர்க்கும் யோகாசனங்கள்", "யோகம் என்பது என்ன?" என்ற தலைப்புகளிலான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யோகிராஜன், திரு. க. ரவீந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (த-5)

# தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சை வினாத்தாள்கள்

## விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 24

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் விமானமூலம் நேற்று பலாலிக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையிலிருந்து 'வாதுவ' கப்பல் மூலம் இவை பருத்தித்துறைக்கு இன்று எடுத்து வரப்படும். (இ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். பிரதேச செயலகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், காட்சி உதைபந்தாட்டப் போட்டியும் இன்று மாலை குருநகர் பாடும்மீன் வி. க. மைதானத்தில் நடைபெறும்.

யாழ். பிரதேச செயலர் திரு. க. குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் போது வடக்குக் கிழக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் திரு. எஸ். மரியதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாகாணசபை விளையாட்டுத்துறையின் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். குணரெட்ணம், யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. எஸ். கனகராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றுவர்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும் காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். நிக்கலஸ் வி. க. அணியும், யாழ்ப்பாணம் பாரதி வி. க. அணியும் மோதும். மாலை 4 மணிக்கு நடைபெறும் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் வி. க. அணி மோதும். (உ)

★ ★ ★

யாழ். நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டு ஆட்டங்கள் இன்று மாலை யாழ் ஆஸ்பத்திரி வீதி அடைக்கல மாதா கோயிலுக்கு முன்னால் உள்ள கழக மைதானத்தில் நடைபெறும். இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ விக்னேஸ்வரா அணி எதிர் மோகனதாஸ் "பி" அணி.

★ மோகனதாஸ் "ஏ" அணி எதிர் மல்லாகம் அணி.

★ ★ ★

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 'டொனால்ட் கணேஷகுமார்' வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று ஷப்றா அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் நீல அணி. மோதும்.

இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

★ ★ ★

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு சுன்னாகம் சிங்கமாப்பாணர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ தொண்டமனாறு ஒற்றுமை வி. க அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் வி. க. அணி

★ ஊரெழு றோயல் வி.க. அணி எதிர் உரும்பராய் உதயசூரியன் வி க. அணி. (உ-89)

# ஆஸ்திரேலியாவிலிருந்து தமிழ்ச் சங்கப் பிரமுகர்

யாழ்ப்பாணம், ஏப். 24

ஈழத் தமிழர்களின் நிலைமையை நேரில் கண்டறிந்து ஆஸ்திரேலிய அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஆஸ்திரேலிய தமிழ்ச் சங்கப் பிரமுகர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

ஆஸ்திரேலியத் தலைநகர் மெல்பேர்னில் இயங்கும் தமிழ்ச் சங்கம் ஈழத்தமிழர் நிலையையும், அவர்கள் பிரச்சினையையும் ஆஸ்திரேலிய அரசுக்கு தெரியப்படுத்த முடிவு செய்துள்ளது ஈழத் தமிழர் பிரச்சினையின் உண்மை நிலையை விளக்கும் வகையில் அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும் தமிழ் சங்கம் முடிவு செய்தது.

அதனைத் தொடர்ந்தே சங்கத்தின் பிரதிநிதியான தமிழ்ப் பெண்மணி ஒருவரை இங்கு அனுப்பி வைத்துள்ளது

கோப்பாயைப் பூர்விகமாகக் கொண்ட அந்தப் பெண்மணி நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்தார். அவர் விடுதலைப் புலிகள் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடி உள்ளார். [அ-3]

# இரு விமானப்படையினரின் சடலங்கள் கண்டு பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

திருகோணமலையில் மொறவேவா என்னுமிடத்தில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் இருவரின் சடலங்களைப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட காயங்கள் அந்த இருவரினதும் சடலங்களில் காணப்பட்டன என்றும் — அதன் காரணமாகவே அவர்கள் இறந்திருக்கலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனியன்று அதிகாலை மொறவேவ விமானப்படை தளத்தில் இருந்து ரோந்து சென்ற விமானப் படை அணியைச் சேர்ந்தவர்களே குண்டுவெடிப்பினால் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. [இ-5]

## மே தினத்தில் ஒலிக்க இருப்பவை

★ மேதினத்தின் மேன்மையினை காதினிக்கப் பறைசாற்று

★ [illegible] உறுதியெடுக்கும் தினம்தான் மே ஒன்று உனக்கு இன்று.

★ [illegible] ஓங்கட்டும் போர்க்குணம்! பொங்கட்டும் விடுதலை உணர்வு!

## நாய்களுக்கு தடுப்பூசி

முகமாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும், பளை தர்மக்கேணி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் இன்று சனிக்கிழமை வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடக் கூடிய சாத்தியம் இருப்பதாக படை அதிகாரிகள் அச்சமுற்றிருக்கும் இவ்வேளையில் —

விடுதலைப் புலிகளின் துணிகரத் தாக்குதல்கள் அப்பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்று வருவதை அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதால் அங்கிருந்து சிங்களவர்களும் முஸ்லீம்களும் அச்சத்தால் வெளியேற முயற்சிக்கின்றனர் என்றும் —

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்வதால் படையினரின் பாதுகாப்பில் நம்பிக்கை இழந்துள்ள மக்களின் வெளியேற்றம் தீவிரமாகும் என்றும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர் [ஒ-எ-6-5]

## கிளாலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொம்மர் தாக்குதல் ஏதும் நடத்தவில்லை பொம்மர் சென்ற சில நிமிடங்களில் அப்பகுதியை நோக்கி ஆனையிறவு முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஷெல்கள் பனங்காணி ஒன்றில் விழுந்து வெடித்ததால், பயணிகள் எவரும் காயமடையவில்லை.

புதுவருடத்துக்குப் பின்னர்; நேற்று முன்தினமே படகுச் சேவை இடம்பெற்றதால், பயணிகள் ஏராளமானோர் அக்கரையிலும் இக்கரையிலும் கூடியிருந்தனர்.

கிளாலியில் இருந்து படகுகள் பயணிகளுடன் சென்றன. அக்கரையில் இருந்து ஏராளமான பயணிகள் இங்கு வந்து சேர்ந்தனர். பூநகரிப் பகுதியில் இருந்து பொருள்களும் குடநாட்டுக்கு எடுத்து வரப்பட்டன.

இதற்கிடையில் —

நேற்று (வெள்ளி) காலை 5.15 மணிக்கு பூநகரி கடற்பரப்பில் நின்ற பீரங்கிப் படகில் இருந்தும் தாக்குதல் நடத்தப்பட்டது. பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்ததால் பயணிகள் பெரும் பதற்றம் அடைந்தனர். (ஒ-117-15-109)

## லயன்ஸ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 24

இறந்தவர்களின் உடலைக் கொண்டு செல்லும் உந்து இழுவை வண்டி ஒன்றை யாழ். லயன்ஸ் கழகம், யாழ் ஆஸ்பத்திரி நோயாளர் நலன் புரிச் சங்கத்துக்கு வழங்கியுள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் ஞானம்ஸ் ஹோட்டலில் நடந்த லயன்ஸ் கழக பிராந்திய மாநாட்டில் வைத்து லயன்ஸ் கழகத் தலைவர் செ சி. இராமகிருஷ்ணன் மேற்படி வண்டியை வழங்கினார். (த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா இளையதம்பி

பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த திருமதி அன்னம்மா இளையதம்பி 23-04-93 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு இளைய தம்பி (உரிமையாளர், யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ் வெலி மடை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பையா, முத்தையாபிள்ளை, காலஞ்சென்ற மயில் வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாசனி சிவானந்தராஜாவின் (ஆசிரியை, இந்துக் கல்லூரி பண்டத்தரிப்பு) பெரியம்மாவும், மயில்வாகனம் குமார வேல்ராசாவின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-04-93 சனிக்கிழமை காலை 10 மணியளவில் 23, சென். பீற்றர்ஸ் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் (அடைக்கல மாதா கோவில் முன்பாக) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. குமாரவேல்ராசா

23 சென். பீற்றர்ஸ் லேன்,
யாழ்ப்பாணம். (25378)

### திருமதி கனகசபை நாகம்மா

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இராமநாதன் வீதி, சாயிசமித்தி ஒழுங்கை 166/3 இல்லத்தில் வாழ்ந்தவருமாகிய திருமதி கனகசபை நாகம்மா 23-04-93 வெள்ளிக்கிழமை காலை காலமாகி விட்டார்.

இவர் அமரர் ஆ. கனகசபையின் அன்பு மனைவியும், பசுபதிப்பிள்ளை (பொறியியலாளர், புகையிரத திணைக்களம்), கலையரசி (கனடா), திருலிங்கநாதன் (பிரான்ஸ்), மலையரசி (யாழ் பல்கலைக்கழகம்), மங்கையர்க்கரசி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வி. வ. நல்லதம்பியின் (முன்னாள் அதிபர்) அருமைச் சகோதரியும், ப. பூலோகநாயகி (ஆசிரியர்), சி. புஸ்பநாதன் (சட்டக்கலைஞர்). தி. சுசி (பிரான்ஸ்), டாக்டர் சிவராஜா (யாழ் பல்கலைக்கழகம்), இ. இராஜசூரியர் (கனடா) ஆகியோரின் மாமியாரும், திருமதி சு. மனோன்மணியின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24-04-93 சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
Dr. சிவராஜா

166/3, சாயிசமித்தி ஒழுங்கை.
இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (சி, 4947)

### இளையதம்பி நல்லையா

புங்குடுதீவு 8ஆம் வட்டாரம் குறிகட்டுவானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளையதம்பி நல்லையா 23-04-93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இளையதம்பி தம்பதிகளின் அன்பு மகனும், இலட்சுமணன் தம்பதிகளின் மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், ஸ்ரீறங்கதாசன் (பாபு), ஸ்ரீகிருஷ்ணதாசன் (சுரேஸ் - கனடா) ஸ்ரீகண்ணதாசன் (கரன் - கனடா), ஸ்ரீகுகதாசன் (சுட்டா - கனடா), கமதி (கனடா), யசோதா (கனடா), சுசீதா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன் (கனடா) செல்வநாயகி, விஜிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, மற்றும் பாலசிங்கம், இராசதுரை சதாசிவம், தனலட்சுமி, பார்வதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் காலஞ்சென்ற வேலாயுதம், காலஞ்சென்ற நடராஜா செல்லத்துரை (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
இ. இராசதுரை
இ. சதாசிவம்

இல 28, அச்சுக்கூட ஒழுங்கை.
கொக்குவில். (25372)

### திருமதி கந்தையா பொன்னம்மா

தன்னை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது டச்சு றோட் சித்தன்கேணி (அருணாசலம் சுப்பிரமணியம்) இல்லத்தில் வசித்தவருமான திருமதி கந்தையா பொன்னம்மா காலமானார். இவர் காலம் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், தம்பர் கணபதிப்பிள்ளையின் மகளும், சிவசுப்பிரமணியம் (வர்த்தகர்), தவமணி சிவபாதசுந்தரம் (ஜேர்மனி), சிவபாலன், சிவராசா சிவலட்சுமி, சிவயோகேஸ்வரி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம் (M. M. B கிளிநொச்சி உரிமையாளர்), கணேசன் (நெடுங்கேணி). இராசரத்தினம் (ஜேர்மனி), சரஸ்வதி, புனிதவதி, சாம்பவி (U. K.), ஆகியோரின் மாமியும், சதாசிவம் (யாழ்ப்பாண ஸ்ரோர்ஸ் கிளிநொச்சி), செல்லாச்சி, தர்மலிங்கம் (வர்த்தகர்) ஆகியோரின் சகோதரியும், சிவஞானத்தின் (வர்த்தகர்) பெரிய தாயாரும். பரமேஸ்வரன் (U. K), மகேஸ்வரன், யோகேஸ்வரன் யோகேஸ்வரி, குகனேஸ்வரன், நந்தினிதேவி, தேவப்பிரியன் U. K.), கிருஷ்ணப்பிரியன் (U. K.), தமிழினி U. K), தர்சினி (U. K), சிவனேஸ்வரன், சுகந்தினி, சிவறஞ்சன், சிவாகரன், சிவகலாநாதன், சிவானந்தன், ஸ்ரீரங்கநாதன், பகீதரன், சசிகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-4-93 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் வலுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சிவசுப்பிரமணியம் (மகன்)

டச்சு வீதி,
சித்தன்கேணி. (25358)

பழனி, ராணிப்பேட்டை தேர்தல்கள்:

# காங்கிரஸ் வேட்பாளர்களை ராமதாஸின் கட்சி ஆதரிக்கும்

தமிழ்நாடு—பழனி நாடாளுமன்றத் தொகுதி, ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரிப்பது என்று பாட்டாளி மக்கள் கட்சி முடிவு செய்துள்ளது.

காங்கிரஸுடன் கொள்கை அடிப்படையில் கருத்து வேறுபாடு இருப்பினும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிரான சக்தியைப் பலப்படுத்து முகமாக காங்கிரஸை ஆதரிப்பது என்று தமது கட்சி தீர்மானித்துள்ளதாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

இதற்கிடையில் இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக்கொள்ள பாட்டாளி மக்கள் கட்சி முன்வந்ததை பிரதமர் பி.வி நரசிம்மராவ் வரவேற்றுள்ளார்.

இத்தகவலை தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று வெளியிட்டார். [இ-எ]

## ராஜீவின் ஆத்மா மன்னிக்காதாம்

### உடன்பாடு குறித்து ஜெயலலிதா

இந்திரா காங்கிரஸுக்கும் பாட்டாளி மக்கள் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட புதிய உடன்பாட்டை மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆத்மா மன்னிக்காது.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நேற்று இவ்வாறு கூறினார்.

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடைசெய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியினர் சட்டசபையில் முன்னர் வற்புறுத்தி வந்தனர். ராஜீவ்காந்தியைக் கொலை செய்த தீவிரவாதக் குழுவுடன் தொடர்பு கொண்டுள்ள பாட்டாளி மக்கள் கட்சியுடன் இப்படி ஒரு உறவு வைப்பது வேதனையை தருகிறது.

இவ்வாறு முதலமைச்சர் மேலும் சொன்னார். (இ-எ)

### லலித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதும் குறிப்பிடத்தக்கவை

லலித் அத்துலத் முதலி, ஐக்கிய தேசியக்கட்சியின் அரசில் — ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியில் இருந்தசமயம் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தார் என்பதும் — தமிழருக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணகர்த்தராக அவர் அப்போது விளங்கினார் என்பதும் தெரிந்தவையே.

அத்துலத் முதலி முன்னர் நடந்த தாக்குதல் சம்பவம் ஒன்றில் இருந்தும் மயிரிழையில் உயிர்தப்பி இருந்தார் புதிய நாடாளுமன்றத்தில் நடந்த விசேட கூட்டம் ஒன்றில் வைத்து கிரனேட் வீச்சுக்கு இலக்காகி படுகாயமடைந்த போதிலும், அதிசயிக்கத்தக்க விதத்தில் அவர் உயிர்தப்பியிருந்தார்.

பிரேமதாச அரசு பதவி ஏற்ற பின்னர் அவரது அமைச்சரவையில் பதவி வகித்து வந்த லலித் அத்துலத் முதலி பின்னர் ஜனாதிபதிக்கு எதிராக காமினி திசாநாயக்காவுடன் இணைந்து அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வந்ததை அடுத்து கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தார். [ஒ]

### கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குணதிலக்கா, ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணம் செல்வதிலும், அங்கு மக்களின் கருத்தை அறிவதிலும் மிகவும் ஆர்வமாக உள்ளனர். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர் விசேடமாக துணைவேந்தர் பீரிஸ் யாழ்ப்பாணம் வருவதில் அதிக அக்கறை காட்டுவதாக அறியவந்துள்ளது.

கொழும்புக் கல்விமான்கள் குழுவின் சார்பில் திரு. பிரட்மன் வீரக்கோன் கொழும்பில் தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் விதத்தில் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டுவரத் தேவையான அறிக்கையைத் தயாரிப்பதே கல்விமான்களின் பிரதான நோக்கம் எனவும் அறியப்படுகிறது. (அ-1-3)

### பல்கலைக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவான உண்ணாவிரதப் போராட்டமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது

உண்ணாவிரதமிருந்து வரும் பட்டதாரி மாணவரான பிக்கு ஒருவரின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போராட்டத்துக்கு ஆதரவாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர றுகுணுப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணா விரதம் இருந்தனர். [இ-6]

## உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில் மகளிர் கல்லூரி இரண்டாம் தவணை 28 - 04 - 1993 ஆரம்பமாகும்.

- அதிபர்.

(சி 4948)

## மரண அறிவித்தல்கள்

### ஆ. சி. நடராசா

(பிரபல பத்திரிகை விற்பனை முகவரும், நயினாதிவு நாகபூஷணி அம்பாள் ஆலய கொடியேற்ற உபயகாரரும், நயினாதீவு தில்லை வெளி பிடாரி அம்மன் ஆலய உரிமையாளரும், யாழ்ப்பாண பஸ் நிலைய ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அறங்காவல், செயலாளரும்)

நயினாதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொட்டடியில் வசித்தவருமாகிய ஆ. சி. நடராசா 23-04-93 வெள்ளிக்கிழமை மாலை காலமாகி விட்டார்.

அன்னார் லீலாவதியின் அன்புக்கணவரும், பாலசுப்பிரமணியம் [புனர்வாழ்வுத் திணைக்களம், யாழ். செயலகம்], கதிரவேற்பிள்ளை, யுகலெட்சுமி, ஜெயவர்த்தனா [பிரான்ஸ்], திலகவதி. மாலினி, வரலட்சுமி [கனடா], மாவீரர் 2 ஆம் லெப். சிவசேது ஆகியோரின் பாசமிகு தந்தையும், உருத்திராம்பாள், சாரதாதேவி, லோகநாதன், கலாமதி [பிரான்ஸ்], கனகலிங்கம், தயானந்தன், பிரதாபன், [கனடா] ஆகியோரின் மாமனாரும், பாக்கியலட்சுமி, பரமசாமி, பத்மநாபன், பழனிவேல், குணரட்ணம், சோதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியம், கோணேஸ்வரி, ஜெயலட்சுமி. சிவநேசரத்தினம், மாசிலாமணி, காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 24-04-93 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு 168/2, முத்தமிழ் வீதி. கொட்டடியில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆர். சி. பரமசாமி [சகோதரர்]
ந. பாலசுப்பிரமணியம் [மகன்]

கொட்டடி. (சி/5046)

### பழனித்துரை அம்பிகாபதி

காலஞ்சென்றவர்களான பழனித்துரை - கனகம்மாவின் அன்பு மகன் பழனித்துரை அம்பிகாபதி (முன்னை நாள் இ. போ. ச. சாரதி) 23-4-93 மாலை காலமானார். இவர் இராசம்மாவின் அன்புக் கணவரும், பாக்கியலட்சுமி (சுவிஸ்), தயாநிதி (கனடா), விமலாதேவி (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), சறோஜினிதேவி, அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணசாமி (சுவிஸ்), நிர்மலாதேவி (கனடா), ஜெகநாதன் (சுவிஸ்), செல்வகுமார் ஆகியோரின் மாமனாரும், சுதாநிதி, நித்தியகலா (சுவிஸ்), அபினா (கனடா), விஜய் (சுவிஸ்), சாய் கார்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், கனகசபாபதி, சிவலிங்கம், பகவதி, முத்துலிங்கம், கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரரும். ஆறுமுகம், சுப்பிரமணியம், மகேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும், உரும்பராய் பசுபதியின் மச்சானுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (24-4-93) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 28/18 மணத்தறை லேன், கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி அம்பிகாபதி

மணத்தறை லேன்,
கந்தர்மடம். (25379)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org